**தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம்**

ஆயுர்வேத திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) ஆயுர்வேத திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவை 18 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் படிவங்கள் சிக்கலானதாக இருத்தல் மற்றும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் நிதிக்கூற்றுக்களில் உள்ள பதிவை மாற்றம் செய்து அனுப்புமாறு தெரிவித்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் தாமதமடைந்துள்ளது எனவும் எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட திகதிகளுக்குள் சமர்ப்பிக்கப்படும் எனவும் நான் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) **அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள** | | |

| | | |
|---|---|---|
| மேலே குறிப்பிடப்பட்ட அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அது 02 மாதங்கள் தாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றிலுள்ள தரவுகளானது திறைசேரி இறுதி கணக்கு கூற்றுக்களில் குறிப்பிட்ட தரவுகளுடன் இணங்கியிருக்க வேண்டி இருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றுக்களில் குறிப்பிட்ட தரவுகளை விட பின்வருமாறு ரூபா 101.11 மில்லியனால் குறைத்து ரூபா 1847.97 மில்லியன் தொகை மொத்த வருமானப் பெறுவனவாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (i) திறைசேரி இறுதி கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் வைப்பு பெறுவனவுகள் ரூபா 24.57 மில்லியனாக இருந்தும் | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் | குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்படாது வைப்பு பெறுவனவுகள் கணக்கிடப்பட்டு நிதி |

| | | | |
|---|---|---|---|
| | நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 3.56 மில்லியன் குறைத்து ரூபா 21.01 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. | இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்ததனால் கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ள பெறுமதியுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ii) | திறைசேரி இறுதி கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 43.86 மில்லியனாக இருந்தும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 42.07 மில்லியன் குறைத்து ரூபா 1.79 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்படாது பெறுவனவுகளை கணக்கீட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருப்பதனால் கணக்காய்வினால் காட்டப்பட்டுள்ள பெறுமதியுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (iii) | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 7(ii) ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்காக திணைக்களம் சேகரித்த ரூபா 71.56 மில்லியன் திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டுநிதியாகக் கருதி ஏனைய பெறுவனவுகளாகக் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், அந்த வருமானத்தால் ரூபா 55.48 மில்லியன் குறைத்து ரூபா 16.08 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்படாது ஏனைய பெறுவனவுகள் கணிக்கப்பட்டு நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்ததனால் கணக்காய்வினால் காட்டப்பட்ட பெறுமதிகளுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ஆ) | மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் திறைசேரியின் இறுதிக் கணக்குகக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவுகள் காட்டப்பட வேண்டிய போதிலும், அந்த அறிவுறுத்தல்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்ததன் காரணமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட செலவுகள் ரூபா 103.07 | | |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (i) | திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகள் ரூபா 2,032.04 ஆக இருந்தும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 85.54 ஆல் குறைத்து ரூபா 1,946.50 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறுக்குப் பதிவுகள் மற்றும் செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட மிகைக் கட்டணங்கள் உள்ளடக்கப்படாது மீண்டுவரும் மற்றம் மூலதனச் செலவுகள் மாத்திரம் காட்டப்பட்டிருந்ததனால் காட்டப்பட்ட பெறுமதிகளுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (ii) | திறைசேரியின் இறுதிக் கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 26.68 மில்லியனாக இருந்தும் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 5.62 மில்லியன் குறைத்து ரூபா 21.06 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்படாது வைப்புக் கொடுப்பனவுகள் கணிக்கப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்ததனால் கணக்காய்வினால் காட்டப்பட்ட பெறுமதியுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (iii) | திறைசேரி இறுதிக் கணக்குக் கூற்றுக்களின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 64.74 மில்லியனாக இருந்தும் நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 11.90 மில்லியன் குறைத்து ரூபா 52.84 மில்லியன் குறைத்து ரூபா 52.84 மில்லியனாகக் காட்டப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்படாது முற்பணக் கொடுப்பனவுகள் கணிக்கப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்ததனால் கணக்காய்வினால் காட்டப்பட்ட பெறுமதியுடன் இணங்கியிருக்கவில்லை. |
| (இ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்கின் மீதி (சாதகமற்றது) ரூபா 172.41 மில்லியனாக இருந்தும் மேலே குறிப்பிட்ட (அ) மற்றும் (ஆ) பந்திகளில் குறிப்பிட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அம்மீதி (சாதகமற்றது) ரூபா 174.37 மில்லியனாக இருக்க வேண்டியிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப்படாது கட்டுநிதிக் கணக்கின் மீதி கணிக்கப்பட்டு நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்ததனால் கணக்காய்வினால் காட்டப்பட்ட பெறுமதியுடன் இணங்கியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| அதற்கிணங்க நிதி செயலாற்றல் கூற்றில் அம்மீதி ரூபா 1.96 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஈ) மேலே குறிப்பிட்ட அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கானது அந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 நிதிநிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதியாக நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 2,815.87 மில்லியன் காட்டப்பட்டிருந்தும் திறைசேரியின் சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 4,303.98 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,488.11 மில்லியனால் குறைத்து நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்குதல் முடிவடையாதிருந்ததனால் இம்மீதியை ஒப்பீடு செய்ய முடியாது எனவும் அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கியதன் பின்னர் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட வித்தியாசத்தை ஒப்பீடு செய்யலாம். |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபார்சுகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசுப் பாயச்சலாக ரூபா 1,825.17 மில்லியன் | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் | காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டுள்ள பெறுமதியில் குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப் பட்டிருக்காததனால் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,905.27 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க ரூபா 80.10 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்காய்வினால் கணிக்கப்பட்ட பெறுமதியில் குறுக்குப் பதிவுகள் உள்ளடக்கப் பட்டுள்ளதனால் இவ்வித்தியாசம் உருவாகியிருந்தது. |
| (ஆ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்த காசுப் பாய்ச்சலின் பெறுமதியாக ரூபா 1,352.94 மில்லியன் வரை காணப்பட்ட போதிலும், கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,511.17 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க ரூபா 158.23 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்கூறியவாறு - | - மேற்படி - |
| (இ) | முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தோன்றிய காசுப்பாய்ச்சலில் எதுவித பெறுவனவும் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்படாதிருந்தும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட கடன் முற்பணங்களிலிருந்து மீள அறவீடு செய்யப்பட்ட தவணைப் பண பெறுமதியாகிய ரூபா 39.54 மில்லியன் அதன் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்கூறியவாறு - | - மேற்படி - |
| (ஈ) | முதலீட்டு செயற்பாடுகளுக்காகச் செலவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சலாக ரூபா 421.14 மில்லியன் காசுப்பாய்ச்சல் கூற்றில் | - மேற்கூறியவாறு - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்தும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த கணக்குப் பொழிப்புக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 433.59 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க ரூபா 12.45 மில்லியன் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | திணைக்களத்தால் நிதிச் செயற்பாடுகளில் பணம் ஈடுபடுத்தப்படாதிருந்த போதிலும், அதன் கீழ் செலவு செய்தலாக ரூபா 51.08 மில்லியன் காட்டப்பட்டிருந்தது. | மேற்கூறியவாறு | - மேற்படி - |

### 1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு மீதி ரூபா 108.80 மில்லியனாக இருந்தது. திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் தனித்தனி மீதிகளின் பட்டியல்களின் பிரகாரம் அக்கணக்கு மீதிகள் முறையே ரூபா 101.11 மில்லியன் மற்றும் ரூபா 108.16 மில்லியனாக இருந்ததனால் வித்தியாசம் முறையே ரூபா 7.69 மில்லியன் மற்றும் ரூபா 0.64 மில்லியனாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இக்கடன் மீதியை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு புலனாய்வு மற்றும் சட்ட உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இந்நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. |

### 1.6.6 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் கீழே தரப்படும் சில ஏடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில ஏடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிணைப் பதிவேடு<br>பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 89(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இப்பதிவேட்டைப் பேணுமாறு கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு<br>மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இப்பதிவேட்டினைப் பேணுவதற்கு அபிவிருத்தி பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| (இ) சேதங்கள் தொடர்பான பதிவேடு<br>சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கட்டுப்பாட்டுப் பிரிவினால் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது. |

### 1.6.7 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக கணக்காய்வுச் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 2,815.87 மில்லியனாக இருந்த போதிலும், நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, திறைசேரி மீளாய்வு | திணைக்களத்திற்குச் சொந்தமான நிதியற்ற சொத்துக்களின் மூலத் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட தகவல்களை ஏடுகளில் பதிவு | பொருட்களின் மீளாய்வு நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்ட உடன் அந்த அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது எனவும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை சிகாஸ் |

| | | |
|---|---|---|
| அறிக்கை மற்றும் ஏனைய போதியளவான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அச்சொத்துக்களைத் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | செய்து சொத்துக்களின் மெய்மையாய்விற்காச் சமர்ப்பித்தல் வேண்டும். | நிகழ்ச்சித்திட்டத்திற்கு உள்ளடக்கி சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கின்றேன். |

### 1.6.8 கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர்களால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுப்படுத்தல்கள் செய்ய வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையைத் தயாரித்து செயற்படுத்துகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் விளைதிறன் தொடர்பாக ஏற்கனவே மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை விளைதிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டிய போதிலும், அம்மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கின்றேன். |
| (ஆ) வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய காலத்திற்குள் தயாரித்தல் இடம்பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38ஆம் பிரிவிலுள்ள | நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் பூர்த்தியடைந்த போதிலும், செயலாற்றல் அறிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனித்துக்கொள்ள வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நடவடிக்கைகள் பூர்த்தியடையாததனால் மேலும் தாமதத்தினை தவிர்ப்பதற்காக அதுவரை வரைபாக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையை இணைத்து அனுப்ப வேண்டியிருந்தது. தற்பொழுது செயலாற்றல் அறிக்கை அமைச்சிற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு கடமைகளை முறையாக நடைமுறைப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறை உள்ளது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுப்படுத்த வேண்டிய போதிலும், அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மனிதவளங்கள் பற்றாக்குறையே காரணமாக இருந்தது. |

### 1.6.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**கணக்காய்வு அவதானிப்புகள்**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 633 | அரசாங்க அச்சகர் நாயகத்தினால் நிறைவேற்ற முடியாது எனத் தெரிவித்த அச்சிடல் நடவடிக்கைகள் மாத்திரம் அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்துடன் தனிப்பட்ட அச்சக நிறுவனங்களின் மூலம் நிறைவேற்றப்பட | நிதிப்பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |

| | | |
|---|---|---|
| | வேண்டிய போதிலும் அந்த அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது தனிப்பட்ட அச்சக நிறுவனத்திற்கு ரூபா 1.68 மில்லியன் செலுத்தி 04 அச்சக நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருந்தது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம் ஏனைய வருமானம் ரூபா 15.35 மில்லியனாக இருந்த போதிலும், உள்ளபடியாக ஏனைய வருமானம் ரூபா 29.05 மில்லியனாக இருந்தததன் காரணமாக முரண் ரூபா 13.70 மில்லியன் அல்லது 89 சதவீதமாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 85(1)(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மதிப்பீட்டினைத் தயாரித்தலானது 100 சதவீதம் சரியாக தயாரிக்கமுடியாததுடன் எதிர்காலத்தில் உச்ச அளவு சரியான முறையில் மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். |

### 2.2 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதிப்பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சரியாகவும் நடைமுறைச் சாத்தியமாகவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது கீழே தரப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படுகின்றது. | | |
| (i) திணைக்களத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,241.60 மில்லியனாக இருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான மொத்த தேறிய நிதிஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 209,557,018 ஆக இருந்தும் இந்நிதி ஏற்பாட்டின் மூலம் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| | வரை அதில் ரூபா 2,032.04 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததனால் தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்புக்கள் ரூபா 209.55 மில்லியனாக இருந்தது. | | 90,374,830 தொகையான விலைப்பட்டியல்கள் மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 49,302,261 தொகையான விலைப்பட்டியல்கள் கட்டுநிதி இல்லாமையின் அடிப்படையில் எஞ்சியிருந்தது என தெரிவிக்கின்றேன். |
| (ii) | 03 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 40.50 மில்லியன் தொகையான நிதிஏற்பாடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதில் ரூபா 27.32 மில்லியன் பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்தது. | குறைநிரப்பு மதிப்பீடு ஒதுக்கீட்டின் மூலம் நிதிஏற்பாட்னைப் பெற்றுக்கொள்ளும் போது தேவைப்பாட்டிற்கு ஒத்ததாக சரியாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். | மீண்டுவரும் செலவு விடயங்களின் கீழ் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சியிருந்த நிதி ஏற்பாட்டிற்காக கடப்பாடுகள் காணப்பட்டதுடன், போதியளவு கட்டுநிதிகள் இல்லாததன் அடிப்படையில் உரிய வவுச்சர்களைத் தீர்த்துவைக்க முடியாதிருந்ததனால் குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடுகளில் சேமிப்புக்கள் காட்டப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஒரு மீண்டுவரும் செலவு விடயம் மற்றும் 05 மூலதன செலவு விடயங்களுக்காக ரூபா 75.75 மில்லியன் நிதி ஏற்பாடு மாற்றம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த 06 செலவு விடயங்களின் மொத்த சேமிப்பு ரூபா 78.52 மில்லியனாக இருந்தது. | சரியாக மதிப்பீடு செய்து நிதி ஏற்பாட்டினை மாற்றஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் திணைக்களத்துடன் இணைந்த நிறுவனங்களில் அவசியமான திருத்த வேலைகளுக்காக நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாட்டினை மாற்றி கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவு கட்டுநிதி இல்லாததன் அடிப்படையில் இவ்சேமிப்பு சுட்டிக்காட்டப்படுகின்றது. |
| (ஆ) | பெறுகை நடவடிக்கைகள் முறைப்படியாகப் பூர்த்தி செய்யப்படாமை, நிதிஏற்பாடு ஒப்படைத்தல் ஆண்டின் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பாதீட்டு மதிப்பீட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட வரையறுத்த நிதிஏற்பாடு வைத்தியசாலைகளின் |

| | | | |
|---|---|---|---|
| | தொடக்கத்தில் இடம்பெற்றிருக்காமை மற்றும் சில செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாமை ஆகிய காரணங்களின் அடிப்படையில் 17 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 148.41 மில்லியனால் ரூபா 117.56 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பு வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 55 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது. | | தேவைப்பாட்டின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்டு அவற்றில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய நிர்மாணங்கள் மற்றும் திருத்தங்களுக்காக நிதி ஏற்பாடு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேவைப்பாட்டின் பிரகாரம் நிதிஏற்பாட்டினை மாற்றம் செய்வதற்கு அனுமதியை பெற்று உரிய ஒப்படைப்பைச் செய்ய வேண்டியிருந்ததனால் ஆண்டின் தொடக்கத்தில் உரிய ஒப்படைப்புக்களைச் செய்ய முடியாதிருந்தது. |
| (இ) | 220-02-03-4-2507 ஆம் இலக்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 40 மில்லியன் நிதிஏற்பாடு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்காக பதவியணியினர் இயலளவு பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 138,700 மற்றும் மூன்று ஆயுர்வேத வைத்தியர்களின் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிக் கட்டணத்திற்காக ரூபா 569,295 செலவு செய்யப்பட்டிருந்தது. | பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தல் வேண்டும். | 220-01-01-2401 மற்றும் 220-02-04-2401 ஆகிய செலவு விடயங்களின் நிதிஏற்பாடு முடிவடைந்திருப்பதனால் இயலளவு அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் உத்தியோகத்தர்களுக்கு அவசியம் என்பதனால் எனது தற்றுணிபின் பேரில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் எஞ்சியிருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து இச்செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் பட்டப்பின் படிப்பு கற்கை நெறிக்காக செலவு செய்த பணத்திற்காக பதில் வழங்குவதற்கு பணத்திற்காக பதில் வழங்குவதற்கு தேவையான ஆவணங்கள் உங்கள் பிரிவில் இருப்பதனால் ஆவணங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் பதில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொரல்லை வைத்தியசாலையை நிர்மாணிப்பது தொடர்பான 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 47.23 மில்லியன் தொகையான பொறுப்புக்களானது பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படாததன் காரணமாக அதற்குச் சமமான பெறுமதியால் பொறுப்புக்கள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டிற்காக திறைசேரியிடமிருந்து பொறுப்புக்களைத் தீர்த்து வைப்பதற்காக ரூபா 159.35 மில்லியன் நிதிஏற்பாட்டிற்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்கான அனைத்து பொறுப்புக்களையும் நிர்ணயிக்கப் பட்டவாறு ஒரு நடைமுறையினைத் தோற்றுவித்தல் வேண்டும். | பொறுப்புக்களுக்குரிய அனைத்து வவுச்சர்களும் 2019 பெப்ரவரி மாதம் வரை கணக்குகள் பிரிவிற்கு கிடைத்திருக்காததனால் அந்த வவுச்சர்கள் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டினைப் பயன்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 21 நிர்மாண செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 110.74 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நிதி ஏற்பாட்டில் ரூபா 103.27 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நிதிச் செயலாற்றல் 7 சதவீதமாக மாத்திரம் இருந்ததுடன் பௌதீக செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சிறிய அளவிலான நிர்மாண வேலை பெறுகை நடவடிக்கைகளை திணைக்களத்தினால் மேற்கொண்டு திணைக்களத்தில் இருக்கின்ற பொறியியலாளர், பொறியியல் உதவியாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோரை உள்ளடக்கிய பதவியணியினரின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கட்டிடங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட நிதிஏற்பாட்டினை உபயோகித்து உரிய திருத்த வேலைகள் 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், கட்டுநிதி போதியளவில் இல்லாததன் அடிப்படையில் வவுச்சர்களுக்காக கொடுப்பனவு செய்யப்படாததனால் செலவுகள் அறிவிக்கப்படாததன் அடிப்படையில் இச்சேமிப்புக்கள் இடம்பெற்றுள்ளது. எனவே பௌதீக செயல்முன்னேற்றம் |

| | | |
|---|---|---|
| | | தொடர்பான தரவுகளை சமர்ப்பிக்க முடியாதுள்ளது |
| (ஆ) மீளாய்வாண்டின் போது 08 மாவட்ட செயலகங்களுக்கு 34 பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 29.23 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இதில் ரூபா 12.54 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதி செயல் முன்னேற்றும் 57 சதவீதமாக இருந்தது. உரிய செயற்பாடுகள் தொடர்பான பௌதீக செயல்முன்னேற்றம் சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகங்களில் இருந்து சரியான மதிப்பீட்டினைப் பெற்று நிதிஏற்பாட்டினை வழங்க வேண்டியதுடன் மாவட்ட செயலகங்களால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | மாவட்ட செயலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட திருத்த வேலைகள் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்டுள்ளதுடன் கட்டுநிதி போதியளவில் இல்லாததன் அடிப்படையில் திசெம்பர் 31 இல் செலவுகள் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை எனவும் அனுராதபுர மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டதானது சமூக சுகாதார மேம்பாட்டு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் சம்பளங்களும் கூலிகளும் மற்றும் செயற்திட்டத்தின் ஏனைய செலவுகளுக்குரிய நிதிஏற்பாடாகும். |

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்களை வழங்குதலும் அறவீடு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து அறவீடு நிலுவையாக இருந்த மீதிகள் ரூபா 1.93 மில்லியன் கூட்டு மொத்தமாக இருந்தது. அந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகள் 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாகக் காணப்பட்டு வருகின்ற போதிலும், இந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கையானது பலவீனமான நிலையில் காணப்பட்டது. | 2004 ஒப்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

## 2.6 செயல்நிமித்த உபகட்டுநிதிகளை வழங்குதலும் தீர்த்துவைத்தல்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் ஏதாவது விசேட செயற்பாட்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதியானது அச்செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும், 32 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.61 மில்லியன் கூட்டுமொத்தமான செயல்நிமித்த உபகட்டுநிதிகள் குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 15 நாட்களிலிருந்து 220 நாட்கள் வரையான வீச்சுடைய கால தாமதத்தின் பின்னர் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செயல்நிமித்த உப கட்டுநிதிகள் செலவு செய்து முடிவடைந்த உடன் மிகுதியினை கிறாப்பருக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தீர்த்து வைத்தல் வவுச்சர்களிலுள்ள அனைத்து குறைபாடுகளையும் பூர்த்தி செய்து சரிசெய்யும் வரை கணக்கு வைத்தல் இடம்பெறலாகாது என்பதனால் முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவு காலம் எடுத்துள்ளது. எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பூர்த்தி செய்யப்பட்ட முற்பணங்களைத் தீர்த்துவைக்கும் வவுச்சர்களை கணக்குகள் பிரிவிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

## 2.7 மிகைக் கட்டணமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் உள்ள சுதேச மருத்துவ முறைமை தொடர்பான தேசிய நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி கற்கை நெறிகளுக்கு பங்குபற்றியவர்களுக்கு உணவுகளை வழங்குவதற்காக ரூபா 7.03 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. உணவுகளை வழங்குவதற்காக பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அந்த நிறுவனத்தின் நலன்புரிச் | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உணவுகளை வழங்குவதற்காக 02/01/02-1 ஆம் கோவையிலுள்ள பதிவுகளின் மூலம் ஆயுர்வேத ஆணையாளர் முன் அங்கீகாரம் வழங்கியுள்ளதுடன் இலாபம் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக நலன்புரிச் சங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் |

| | | | |
|---|---|---|---|
| | சங்கத்தினால் வெளித்தரப்பினர்களால் கொள்வனவு செய்து வழங்குகின்ற உணவுகளுக்காக செலவு செய்த பணத்திற்கு 10 சதவீத இலாபப் பங்கு சேகரிக்கப்பட்டு நரன்புரிச் சங்கத்தின் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களின் பெறுமதிக்கு திணைக்களத்தினால் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | | இணைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது எதுவித அதிகாரமுமின்றி ஆழ்ந்த சிறுநீரக நோயை குணப்படுத்துவதற்காக உள்நாட்டு சிகிச்சைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 05 உத்தியோகத்தர்களுக்கு போக்குவரத்துப் படிகளாக ரூபா 67,500 மொத்த தொகையும் 09 உத்தியோகத்தர்களுக்கு கணக்கு நடவடிக்கைகளை நிறைவேற்றும் படியாக ரூபா 150,000 மொத்தத் தொகையும் 05 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்த செயல்முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களுக்கு பங்குபற்றும் படியாக ரூபா 14,250 மொத்த தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | அதிகாரமின்றி மேற்கொள்ளப்பட்ட படிக் கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (இ) | சுதேச மருத்துவம் தொடர்பான தேசிய நிறுவனத்தின் விடுதிகளில் காணப்படுகின்ற 24 அறைகளில் ஒரு அறை 2007 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுத் திகதியான 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தில் சுதேச மருத்துவ அமைச்சின் ஊடகப் பிரிவிலுள்ள இரண்டு உத்தியோகத்தர்களுக்கு முழுநேர வதிவிடத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அக்காலப்பகுதிக்காக ரூபா 803,000 கட்டணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை | நிர்ணயிக்கப்பட்டவாறு கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது சம்பந்தமாக சுதேச மருத்தும் தொடர்பான தேசிய நிறுவனத்தினால் தெளிவுபடுத்தப் பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 2018 நவம்பர் 27 ஆந் திகதி வரையான இரண்டு மாத காலம் அமைச்சின் புலனாய்வு பிரிவிலுள்ள 4 உத்தியோகத்தர்களுக்கு இரண்டு அறைகள் தங்குமிடத்திற்காக வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து ரூபா 12,000 மொத்த தொகையான கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விடுதிக் கட்டணத்தை தீர்மானித்த மற்றும் அறவீடு செய்த அடிப்படையும் அதற்கான அங்கீகாரமும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் 2015 ஆம் ஆண்டிலிருந்து கட்டணம் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | பொறலை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் உணவுச் சாலையை நடாத்தி வரும் நபர்களிடமிருந்து 2015 சனவரி மாதத்திலிருந்து மாதாந்தம் ரூபா 41,000 வீதம் ரூபா 1.97 மில்லியன் மொத்த தொகை கட்டணமாக அறவீடு செய்யப்பட்டிருந்தது. அந்த வருமானத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது வைத்தியசாலையின் விளையாட்டு மற்றும் நலன்புரிச் சங்கத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அரசாங்க கட்டிடத்தில் நடாத்தப்படுகின்ற உணவுச் சாலையிலிருந்து அறவிடப்படுகின்ற வாடகையை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். உணவுச் சாலையை நடாத்துபவரினால் வழங்கப்பட்ட வாடகையை நலன்புரிச் சங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உணவுச் சாலையை நடாத்துவது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய நீர், மின்சாரம், நில வாடகை என்பவற்றை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து 2014 திசெம்பர் 21 ஆந் திகதி ஆயுர்வேத ஆணையாளருக்கு ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்போதிருந்த ஆணையாளரால் இது சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பேன் என தெரிவிக்கின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டினை அடிப்படையாகக் கொண்டே முன்னுரிமையின் பிரகாரம் செயற்பாட்டுத் திட்டம் (Activity Plan) நடைமுறைப்படுத்தும் கால அட்டவணை (Time Line) மற்றும் அந்நடவடிக்கைகளிலிருந்து எதிர்பார்த்த வெளியீடு அல்லது விளைவுகள் (Output / Outcome) என்பவற்றை உள்ளடக்கும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் (Action Plan) தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான இறுதிக் காலாண்டு வரை இணைந்த நிறுவனங்களின் தகவல்கள் சேகரிக்கப்பட்டிருந்தும் சரியான தகவல்கள் கிடைப்பதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தினை மீண்டும் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் சரியான கால அட்டவணையுடன் தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதனை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என தெரிவிக்கின்றேன். |
| (ஆ) திணைக்களத்தின் கீழுள்ள ஒவ்வொரு பிரிவு, துணை நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருந்தகங்கள் என்பவற்றின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பாடுகளை சரியாக இனங்காணக்கூடிய வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும், | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய தகவல்கள் 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்காக உலர்த்தாத மற்றும் உலர்த்திய மருந்துகளை கொள்வனவு செய்யும் செயற்பாடு அதில் உள்ளடக்கப்படவில்லை. | | |
| (இ) | பிரதேசத்தின் காலநிலை வானிலை மற்றும் மூலிகைப் பயிர்ச்செய்கைக்குரிய ஏனைய அம்சங்கள் தொடர்பாக தனித்தனியாக கவனம் செலுத்தி அந்த மூலிகைப் பூங்காக்களுக்காக உறுதியான நடவடிக்கைகளை இனங்கண்டு செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டின் போது ஒவ்வொரு மூலிகைப் பூங்காக்களுக்காக தனியான அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | மருந்துகள் உற்பத்திக்காக உள்நாட்டு வழங்குனர்களிடமிருந்து உலர்த்தாத மற்றும் உலர்த்திய மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 33.86 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் திணைக்களம் மூலிகைப் பூங்காக்களிலிருந்து அத்தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் முறையான மற்றும் ஒழுங்கான வேலைத்திட்டம் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உலர்த்தாத மற்றும் உலர்த்திய மருந்து தேவைப்பாட்டை திணைக்களத்தின் மூலிகைப் பூங்காக்களிலிருந்து வழங்கும் முறையான வேலைத் திட்டத்தை இனங்கண்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும். | மூலிகைப் பூங்காக்களிலுள்ள பெரிய மரங்களை அகற்றி விவசாய பண்ணையாக அபிவிருத்தி செய்யக் கூடிய இயலுமை இல்லாமையும் மூலிகைப் பூங்காக்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டத்தை பயன்படுத்தி முடியுமான அளவு உச்ச அளவு வினைத்திறனைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (உ) | 6 மூலிகைப் பூங்காக்களில் பயிரிடப்பட்டுள்ள 223 ஏக்கர் அளவான காணியில் குறுங்கால மருந்துப் பயிர்களை கீழ்ப்பயிர்களாக | குறுங்கால கீழ்ப் பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பதற்குள்ள இயலுமைகள் தொடர்பாக ஆராய்ந்து | இது தொடர்பாக தற்பொழுது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க ஒவ்வொரு மூலிகைப் பூங்காக்களுக்காகத் |

| | | |
|---|---|---|
| ஆரம்பிப்பதற்கு உள்ள இயலுமை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | பார்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டத்தை பயன்படுத்தி முடியுமான அளவில் உச்ச அளவு வினைத்திறனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**3.2 செயற்பாடுகள் தொடர்பாக செயல்முன்னேற்ற மீளாய்வு செய்யப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து பிரிவுகள், உப நிறுவனங்கள் வைத்தியசாலைகள், மூலிகைப் பூங்காக்கள் என்பவைகள் தொடர்பான நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக செயற்பாட்டு குறிகாட்டிகள் உருவாக்கப்படாதிருந்ததுடன் நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகளின் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்காக குறிகாட்டிகள் உருவாக்கப்பட்டு நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். | உரிய செயலாற்றல் குறிகாட்டிகளை உருவாக்குவதற்காக தற்பொழுது ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கையை முடியுமான அளவு விரைவாக பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் (Action Plan) பிரகாரம் உரிய செயல் முன்னேற்ற அறிக்கையானது 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயற்பாடுகளை நிறைவேற்றாமை, பிரதான செயற்பாடுகளுக்கு முரணாக செயற்படுதல், எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை, எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளாமை, செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடுதல், | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயல் முன்னேற்றத்தை மாதாந்தம் நாளதுவரையாக்கும் வகையில் நடைமுறைகளைத் தோற்றுவித்து செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயல்முன்னேற்றத்தை மேற்பார்வை செய்து எதிர்பார்க்கப்பட்ட நலன்களை மீளாய்வாண்டின் போது பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மனித வளங்கள் பற்றாக்குறையாக இருந்ததுடன் இந்த விடயத்திற்கு புதிதாக உத்தியோகத்தர் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றனர். மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு செயல்முன்னேற்ற மீளாய்வு அறிக்கையானது யூன் மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்கு அனுப்பி வைக்கப்படும். |

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம், காலதாமதத்தின் பின்னர் வேலைகளை ஆரம்பித்த செயற்திட்டங்கள் என்பவை தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

### 3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கைகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிதி சுற்றறிக்கை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் முன் வைப்பதற்காக 2019/05/22 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைக்கு திணைக்களத்தின் மற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவின் 04 செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. 06 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 4 பிரிவுகளுக்கு ஆண்டின் ஆரம்பத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளின் அளவு, ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட அளவு மற்றும ஆண்டின் இறுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய அளவு தொடர்பாக தகவல்கள் | ஒவ்வொரு பிரிவிற்கும் நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிர்மாண செயற்பாடுகள் தொடர்பான தகவல்களானது தொடர்ந்து செய்கின்ற, புதிய மற்றும் கைவிடப்பட்ட செயற்திட்டங்களுக்காக வகைப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | நிர்மாணங்கள் சம்பந்தமான அனைத்து தகவல்களையும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

**3.4 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டிலிருந்து தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பெறுகை கால அட்டவணையில் ஒவ்வொரு பெறுகைச் செயற்பாடும் உறுதியாக இனங்காணப்பட்டிருக்காததுடன் பெறுகைகளின் செயல்முன்னேற்றம் தொடர்பாக அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் (கால அட்டவணைகளை உள்ளடக்கி) பதில்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்திற்கு ஆயுர்வேத வைத்தியசாலைக்காக கொள்வனவு செய்யப்படுகின்ற உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் மூலிகைப் பூங்காக்களில் திட்டமிட்ட நிர்மாணங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை நடைமுறைக ளுக்குரிய விடயங்களையும் உள்ளடக்கும் வகையில் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். | உலர்த்தப்படாத மற்றும் உலர்த்திய மருந்துகளைக் கொள்வனவு செய்தலானது 1204 ஆம் இலக்க மருத்துவ வழங்கல்கள் செலவு விடயத்தில் உள்ளடக்கப் பட்டுள்ளது. |
| (ஈ) | மரபு ரீதியான மருத்துவ முறை மற்றும் இயற்கை மருந்துகள் | அரசாங்க பெறுகைகள் | இக்கண்காட்சி யிலிருந்து பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பான சர்வதேச கருத்தரங்கும் வர்த்தக கண்காட்சியும் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது ரூபா 39.41 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 8.40 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 46.42 மில்லியனுக்குரிய பெறுகைகள் சம்பந்தமான கேள்வி ஆவணங்கள் (Bid documents) ஒப்பந்த நிபந்தனைகள் (Conditions of contract), வழங்கப்பட்ட கேள்விகளின் அளவு கிடைத்த கேள்விகள், கேள்விகளைத் திறத்தல் அறிக்கை, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் பெறுகைக் குழுவினதும் அறிக்கைகள், ஒப்பந்த பெறுமதிகள், வழங்குனர்களுடன் மேற்கொண்ட உடன்படிக்கைகள், கேள்வி பிணை முறிகள், செயலாற்றல் பிணைமுறிகள் முதலியன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த சர்வதேச கருத்தரங்கு மற்றும் வர்த்தக கண்காட்சியின் ஒட்டுமொத்த செலவுகள் தொடர்பான தகவல்கள் மற்றும் எதிர்பார்த்த நலன்களை உள்ளடக்கிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கணக்காய்விற்குத் தேவையான தகவல்களை தாமதமின்றி சமர்ப்பித்தல் வேண்டும். | கொள்ளப்பட்ட நலன்கள் 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளன. மேலும், இது சம்பந்தமான கோவைகள் அனைத்தும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன |
| (உ) | நாவின்ன பண்டாரநாயக்க ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையின் மகளிர் வாட்டுவிற்காக ரூபா 14.9 மில்லியன் மொத்த கிரயமான 4D Volume Probe வசதிகளுடனான high end color Doppler ultra sound scanner இயந்திரத்தை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் அடிப்படையில் கேள்விகள் கோரப்பட்டுள்ளன. |
| (i) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.14.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் ரூா 10 மில்லியனுக்கு குறைவான பெறுகைகள் சம்பந்தமாக திணைக்கள பெறுகைக் குழுவிற்கு நடவடிக்கை எடுக்கக் கூடியதாக இருந்த போதிலும், இந்த நிதி எல்லையை மிகைத்து ரூபா 14.9 மில்லியன் மொத்த கிரயமான பெறுகைகள் விலை ஒப்பீட்டு | | |

முறைமையை பின்பற்றி திணைக்கள பெறுகைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 12 நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டிருந்தும், 2 நிறுவனங்களால் மாத்திரம் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரம் 4D Volume Probe வசதிகளுடனான கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டன. மாதிரிகளின் பிரகாரம் தீர்மானிக்கக்கூடிய காரணியான 4D Volume Probe வசதிகளை வழங்குவதற்கு ஒரு கேள்விதாரர் மாத்திரம் முன்வந்திருந்தார். இதன் காரணமாக பெறுகையை வெளிப்படைத்தன்மை மற்றும் போட்டித்தன்மையாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(iii) இந்த ஸ்கேன் இயந்திரத்தை வேண்டிக் கொண்ட வைத்தியரிடமிருந்து 4D Volume Probe வசதிகள் அத்தியாவசியமானது என 2017 திசெம்பர் 11 ஆந் திகதி ஒரு கடிதத்தினைப் பெற்றுக்கொண்டு அந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு பெறுகைக்குழு தீர்மானித்திருந்தது.

(iv) மேற்கத்திய முறைமையில் மகளிர் நோயாளிகளுக்காக வைத்தியம் செய்யும் முன்னணி வைத்தியசாலையான காசல் வீதியிலுள்ள மகளிர் வைத்தியசாலையிலேனும் இவ்வாறான உயர்ந்த மட்டத்திலான தொழில்நுட்ப வசதிகள் மற்றும் இயலளவு மட்டத்தைக் கொண்ட ஸ்கேன் இயந்திரம் இருக்கவில்லை. அந்த வேண்டுதலை விடுத்த வைத்தியர் விசேட நிபுணத்துவ வைத்தியரல்ல. அவரினால் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட நோய் தொடர்பான பரிசோதனைகளுக்கு இந்த இயந்திரத்தின் தேவைப்பாடு மற்றும்

இயந்திரத்தை செயற்படுத்தி தேவையான பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலுமையுள்ள வைத்தியர் தொடர்பான தகவல்களை ஆராய்ந்து பார்க்காது இந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(v) வழங்கப்பட்ட இயந்திரமானது மாதிரிகளுடன் ஒத்திருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாது இயந்திரம் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் இயந்திரத்தை செயற்படுத்துதல் தொடர்பான பயிற்சிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) வழங்கப்பட்டுள்ள ஸ்கேன் இயந்திரத்திற்கு சரியான 4D Volume Probe கணினி மென்பொருள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுவும் முறைமையில் பலவீனங்கள் காணப்படுகின்றது என்பதுவும் பிரின்டர் பொருத்தமான வகையில் செயற்படவில்லை என்பதுவும் பின்னர் மேற்கொண்ட பரிசீலனையின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(vii) இந்த இயந்திரத்தை வேண்டிக் கொண்ட வைத்தியரின் அறிவின் அடிப்படையில் மாத்திரம் 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதியிலிருந்து இந்த இயந்திரம் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஸ்கேன் இயந்திரத்திலிருந்து வைத்தியர் எதிர்பார்த்த மற்றும் அத்தியவசதியமானதாகக் கருதியதாகக் குறிப்பிட்ட 4D Volume Probe வசதிகள் இல்லை என்பதனை இனங்காண்பதற்கு அந்த வைத்தியருக்கு முடியாதிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2000 ஆம் ஆண்டின் போது ஆயுர்வேத ஆராய்ச்சிக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 14.60 மில்லியன் கிரயமான CGMS இயந்திரம் 2012 திசெம்பர் மாதத்திலிருந்து 2018 ஆகஸ்ட் மாதம் வரையான 06 ஆண்டுகளுக்கு அண்மித்த காலப்பகுதியில் 09 சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் பரிசோதனைக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. | இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர் தேவைப்பாட்டை முறையாக இனங்காண வேண்டியதுடன் அதற்கு இணக்கமற்ற வகையில் உத்தியோகத்தரின் தீர்மானத்தின் அடிப்படையில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக 1993 யூலை 21 ஆந் திகதிய 320 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை கடிதத்தில் குறிப்பிட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்பொழுது ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றது. |
| (ஆ) ஆயுர்வேத ஆய்வுகூடத்திலுள்ள ரூபா 3.21 மில்லியன் கிரயமான டென்சிடனோ மீட்டர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கணனி செயற்பாடற்றுக் காணப்பட்டிருந்தும் அவற்றினை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது முறைப்படி கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஆய்வுகூடத்தில் வைக்கப்பட்டிருந்தது. | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது முறைப்படியாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இந்த டென்சிடனோ மீட்டரை கைதவிர்ப்புச் செய்வதற்காக சிபார்சுகள் உள்ளதுடன் சில நிறுவனங்கள் இந்த டென்சிடனோ மீற்றரின் தேவைப்பாடு பற்றி விசாரித்துள்ளன. எந்த நிறுவனமும் தேவை பற்றி தெரிவித்திருக்கவில்லை. எனவே இந்த டென்சிடனோ மீட்டரை என்ன செய்யலாம் என்பது பற்றி அமைச்சிடம் விசாரித்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். |

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டுள்ளது என்பது உறுதிப்படுத்திக் கொள்ளப்படாததுடன் நிதிப் பிரமாணம் 891 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை தேவைப்படுகின்ற அனைத்து உத்தியோகத்தர்களின் பெயர்களை உள்ளடக்கிய பிணை பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. |

### 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் ஒரு மோட்டார் வாகனம் 2016 ஆம் ஆண்டின் போது விபத்துக்குள்ளாகி ஏற்பட்ட நட்டம் ரூபா 158,100 ஆக இருந்ததுடன் அதனை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

### 3.8 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆய்வுகூடத்தில் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை முகாமைத்துவ முறைமை தொடர்பான ஆராய்ச்சிகளை | கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டு எதிர்பார்த்த | பதவியணியினரைச் சேர்த்துக் கொள்வதற்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைகளைத் |

| | | | |
|---|---|---|---|
| | மேம்படுத்தும் செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக நேரடியாக பங்களிப்புச் செய்யும் 63 உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்பட்ட நிலைமையின் கீழும் தேவையான ஆய்வுகூட வசதிகள் பூரணப்படுத்தப்படாமலும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 164.96 மில்லியன் கிரயமான ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படாதிருந்தும் 2016 ஆம் ஆண்டின் போதும் ரூபா 38.04 மில்லியன் கிரயமான ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அந்த உபகரணங்களில் ரூபா 65.06 மில்லியன் கிரயமான உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன் ரூபா 137.94 மில்லியன் கிரயமான உபகரணங்கள் குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. | குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | பாரம்பரிய அறிவை பாதுகாத்தல் மற்றும் சுதேச மருத்துவத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் நாடு முழுவதிலுமுள்ள அனைத்து பாரம்பரிய வைத்தியரினதும் அறிவைப் பாதுகாப்பதற்கு மற்றும் அதற்காக கேள்வி பார்வை தகவல் கேந்திர நிலையத்தை தோற்றுவிப்பதற்குத் தீர்மானித்து ரூபா 23.55 மில்லியன் செலவு செய்து அப்பிரிவிற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், அப்பிரிவின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நேரடியாகத் தேவைப்படுகின்ற கேள்வி பார்வை பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீடியோ பதிப்பாளர், ஒலிபெருக்கி பதிப்பாளரும் உதவியாளரும் கணனி செயற்பாட்டாளர் ஆகிய 07 பதவிகளும் 03 கமரா நிபுணர் பதவிகளும் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை அங்கீகரிக்கப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காததனால் உரிய உபகரணங்கள் விளைவற்றுக் | விரைவாக உரிய உத்தியோகத்தர் களைச் சேர்த்து செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிரந்தர பதவியணியினர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் அதுவரை தேவைப்பாட்டின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டுள்ளனர். |

காணப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (இ) | முதலாம் கட்டத்தின் கீழ் ரூபா 39.94 மில்லியன் செலவு செய்து மிகிந்தலை இலுப்புகன்னி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மைத்திரிபால சேனநாயக்க ஞாபகார்த்த பாரம்பரிய ஆராய்ச்சி வைத்தியசாலை மற்றும் நூதனசாலைக்கான கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 2017 மார்ச் 31 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை திட்டமிடப்பட்டிருந்த குறிக்கோள்களுக்காக அக்கட்டிடம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டிருந்த குறிக்கோள் களுக்காக வைத்தியசாலை பயன்படுத்தப்படல் வேண்டும். | வருடாந்த இடமாற்றத்தின் கீழ் இதற்காக உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளனர். இடமாற்றத்தை அமுல்படுத்துகின்ற திகதியான 2019.06.03 ஆந் திகதி வரை அதற்கிணங்க அவ் வைத்தியசாலையை விரைவாக ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. |
| (ஈ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 77 ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுர்வேத மருத்துவ முறைமையின் மற்றும் சத்திரசிகிச்சை மருத்துவத்தின் செயற்பாடுகளுக்காக ஏதாவது பொருள் அல்லது மருந்தை உற்பத்தி செய்தல் விற்பனை செய்தல், வழங்குதல், பகிர்ந்தளித்தல் அல்லது தயாரித்தலினை தடைசெய்வதற்கு, ஒழுங்குபடுத்துவதற்கு அல்லது நிருவகிப்பதற்குத் தேவையான கட்டளைகளை விடுவிப்பதற்கு ஆயுர்வேத ஆணையாளரால் அதிகாரச்சட்டத்தின் கீழ் கட்டளைகளை விதிக்கக் கூடிய சட்டக்கோவையை தயாரித்தல் வேண்டும். 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது இது சம்பந்தமாக ரூபா 564,580 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அச்சட்டக் கோவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஆயுர்வேத சட்டக் கோவை தயாரிக்கப்பட்டு வெளிப்படுத்துதல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்ட புதிய குழு வரைபாக்கிய சட்டக் கோவையானது ஒரு விசேட குழுவின் மூலம் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. |
| (உ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 7 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் மூலம் ஆயுர்வேத ஆணையாளருக்கு ஆயுர்வேத | முறையான ஆய்வுகளின் பின்னர் ஆயுர்வேத ஆரோக்கிய நிலையத்தையும் அதனுடன் இணைந்த நிறுவனங்களையும் தோற்றுவிக்கும் திட்டம் | முறையான ஆய்வுகளின் பின்னர் திட்டங்களுடன் இந் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | ஆரோக்கிய நிலையம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களைத் தோற்றுவித்து பேணுவதற்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனினும் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களை தோற்றுவிப்பதனை கருத்திற்கொண்டு புதிய ஆரோக்கிய நிலையத்தையும் அதனுடன் இணைந்த நிறுவனங்களையும் தோற்றுவிப்பதற்கு மிகவும் பொருத்தமான இடத்தை இனங்காண்பதற்கும் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். | எடுக்கப்பட்டன. |
| (ஊ) | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஆயுள்வேத திணைக்களம், மாகாண சபை உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகிய அரசாங்க நிறுவனங்களின் கீழ் பேணப்பட்டு வருகின்ற ஆயுர்வேத வைத்தியசாலை, ஆயுர்வேத மருந்தகம், மற்றும் ஆயுர்வேத மருந்துச்சாலை, ஆயுர்வேத மருந்து உற்பத்திச் சாலை என்பன பதிவு செய்யப்பட வேண்டியிருந்தது. இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் கொழும்பு மற்றும் கண்டி மாநகர சபைகள் இரண்டும் காலி மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் ஆகிய நான்கு நிறுவனத்தில் ஸ்தாபிக்கப்பட்ட 4 உற்பத்திச்சாலைகளைத் தவிர்த்து ஏனைய எந்த ஆயுர்வேத வைத்தியசாலையும் ஆயுர்வேத மருந்தகமும் ஆயுர்வேத மருந்து உற்பத்தி நிலையமும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து அந்த நிறுவனங்களை பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் தனியார் மற்றும் அரசாங்கத்தின் அனைத்து ஆயுர்வேத நிறுவனங்களும் உற்பத்திச் சாலைகளும் ஒழுங்குபடுத்துதல் வேண்டும். | கருத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்துள்ள தனியார் ஆயுர்வேத சிகிச்சை நிலையம், தனியார் பஞ்சகர்ம நிறுவனம், தனியார் ஆயுர்வேத வைத்தியசாலை தனியார் உற்பத்தி நிலையம், தனியார் விற்பனை நிலையங்கள் சம்பந்தமாக மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு மருந்துகளுக்காக | தொழில்நுட்ப பிரிவில் பதிவு செய்தல், உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் முதலிய செயற்பாடுகளுக்குரிய அனைத்து தகவல்களையும் உள்ளடக்கியவாறு இந்த உள்ளகக் | கணனி தரவு முறைமையை நாளதுவரையாக்கி முறைமைப் படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | புதிதாக பதிவு செய்தலும் அவற்றை புதுப்பித்தலும் சம்பந்தமாக கணனி தரவு முறைமைகளை தோற்றுவித்து பேணுவதற்கு 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்பாட்டுடனான கணனி முறைமையைத் தோற்றுவித்து பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஏ) | இறக்குமதி செய்யப்பட்ட 886 மருந்து வகைகளுக்காக இறக்குமதி உத்தரவுப் பத்திரங்களும் 892 உள்நாட்டு மருந்து வகைகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கான உத்தரவுப் பத்திரங்களும் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) | உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள மருந்து வகைகள் மருந்துகளின் பெயர்களுடன் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மருந்து வகைகளை மருந்துப் பொருடகளின் கீழ் பதிவு செய்து கொள்வதற்கும் ஒழுங்குபடுத்துதல் குழுவின் அங்கீகாரமின்றி மருந்துகளின் இறக்குமதி உத்தரவுப் பத்திரங்களை வழங்குவது சம்பந்தமாக பரிசீலனைகளை நடாத்தி உரிய உத்தியோகத்தர் களுக்குஎதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் உத்தரவுப் பத்திரங்கள் வழங்குவதற்குரிய | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |
| (ii) | ஒழுங்குபடுத்துதல் குழுவின் அங்கீகாரமின்றி மருந்து இறக்குமதி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறே சுங்கத்தீர்வைகளுடன் இறக்குமதி செய்த மருந்துப் பொருட்களின் கீழ் வருகின்ற இறக்குமதி செய்த மருந்து வகைகள் சுங்கத் தீர்வைகளற்ற பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டு உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | உள்ளகக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துவதற்கும் முயற்சிகள் எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |
| (iii) | இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு மருந்து வகைகளுக்காக | திணைக்களத்தினால் மாதிரிகள் பெற்றுக் | கருத்துக்கள் தெரிவிக்கப் |

| | | | |
|---|---|---|---|
| | உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில்நுட்ப பரிசோதனைகள் திணைக்களத்தால் நேரடியாக கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (ITI) இடம்பெற்றிருக்காததுடன் உத்தரவுப் பத்திரங்கள் விண்ணப்பதாரர்களால் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தினால் (ITI) அப்பரிசோதனைகளை நடாத்தி சமர்ப்பித்த, சான்றிதழின் அடிப்படையில் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | கொள்ளப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனத்தினால் பரிசோதனைகளை நடாத்தி உரிய அறிக்கைகளை நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | படவில்லை. |
| (iv) | உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு மருந்து வகைகளின் மாதிரிகளை சந்தையிலிருந்து பெற்றுக் கொண்டு தொழில்நுட்ப பரிசோதனைக்கு உட்படுத்தி பாவனையாளர்களைப் பாதுகாப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாவனையாளர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்காக தேவையான தொழில்நுட்ப பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |
| (v) | மருந்து மாதிரிகளைப் பதிவு செய்தல் மற்றும் உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் சம்பந்தமான கோவைகள் தொழில்நுட்ப பிரிவில் பாதுகாப்பின்றியும் முறையற்ற வகையிலும் காணப்பட்டன. பிரிவின் பிரதான கடமைகளை நிறைவேற்றும் போது தொடர்ச்சியாக தனியார் கம்பனிகள் மற்றும் நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்பு வைத்திருக்க வேண்டிய போதிலும், அதற்கு நேரொத்த வகையில் பாதுகாப்பாகவும் முறையாகவும் கோவைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில்நுட்ப பிரிவினை பொருத்தமான வகையில் முறைமைப் படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |
| (ஐ) | ஆயுர்வேத சமூக மருத்துவ உத்தியோகத்தர்கள் 308 நபர்கள் மேற்கு, மத்திய, சபரகமுவ ஆகிய மாகாணங்களைத் தவிர்த்து ஏனைய மாகாணங்களில் சிறுநீரக நோய் அதிகமாகக் காணப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் 05 ஆண்டுகள் கட்டாய சேவைக் காலத்திற்கு உட்பட்டு 2014 ஒக்தோபர் 01 ஆந் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதுடன் அதற்கு முரணாக நடவடிக்கை எடுத்தலை சரி செய்வதற்கும் அனைத்து சமூக சுகாதார மருத்துவ | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து பதவிக்கு உள்ளீர்ப்புச் செய்வதற்கு 2014 ஒக்தோபர் 10 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அமைச்சரவை அங்கீகாரத்திற்கு முரணாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ஆயுர்வேத மருத்துவ சேவையில் ஆரம்பத்தரத்தில் 164 மருத்துவ உத்தியோகத்தர்கள் மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.<br><br>2014 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அந்த 164 உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 197.28 மில்லியனாகும். | உத்தியோகத்தர்களுக்கும் சிறுநீரக நோயை குணப்படுத்துவதற்குரிய கடமைகளை ஒப்படைப்பதற்குமான மேற்பார்வை மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | |
| (ஒ) | சுதேச மருத்துவ முறைமையினை அடிப்படையாகக் கொண்டு போதிய சுகாதார வசதிகள் இல்லாத கிராமிய பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் சுதேச மருத்துவ முறைமையின் மூலம் சமூக சுகாதார வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்கு 2015 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகள் மற்றும் உள்ளபடியான செலவுகள் முறையே ரூபா 502.49 மில்லியன் மற்றும் 473.62 மில்லியன்களாகும். செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே முறையாகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததனால் முறைப்படியாக செயல்முன்னேற்றத்தை அறிக்கையிடுதல் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்குப் பதிலாக மாதாந்தம் தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்கின்ற அளவு செயல்முன்னேற்றமாக அறிவிக்கப்பட்டிருந்தது. | முறையாகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் செயல்திட்டத்தை அமலபடுத்துதலும் அது சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கை எடுத்தலும் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |
| (ஓ) | ஆழ்ந்த சிறுநீரக நோயை குணப்படுத்துவதற்கான உள்நாட்டு சிகிச்சையை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை 6 | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து செயற்திட்டத்தின் | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தவதற்கு சிறுநீரக நோயை குணப்படுத்தும் சனாதிபதி செயலக படையணியால் 2018 ஆகஸ்ட் 01 ஆந் திகதியிலிருந்து 06 மாத காலத்திற்காக ரூபா 5.83 மில்லியன் நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டு முழு நிதிஏற்பாட்டுப் பணமும் 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதி ஆயுர்வேதத் திணைக்களத்திற்கு காசோலைகளின் மூலம் வழங்கப்பட்டிருந்தது.<br>நிகழ்ச்சித்திட்டங்களின் காலம் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து மேலும் 06 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நிகழ்ச்சித்திட்டங்களின் 6 பிரதான நடவடிக்கைகளில் 3 நடவடிக்கைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 591,366 செலவு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த சனாதிபதி உதவி செயலாளரின் 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தொடர்புபட்ட தரப்பினரால் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலானது மாதாந்தம் சிறுநீரக நோயை குணப்படுத்தும் சனாதிபதி செயலாற்றல் படையணிக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், அந்த அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டிருக்க வில்லை. | குறிக்கோள்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஔ) | இலங்கையில் சுதேச மருத்துவ முறைமையை அடிப்படையாகக் கொண்ட மருந்து உற்பத்தி கைத்தொழிலுக்காக நியம தரத்திலான மூலப்பொருட்களை வழங்கும் குறிக்கோளில் விவசாயிகளின் பங்குபற்றலுடன் மூலிகைப் பயிர்ச்செய்கை செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான முறையான திட்டத்தை தயாரித்து காலதாமதமின்றி செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் | கருத்துக்கள் தெரிவிக்கப் படவில்லை. |

நிதியங்களிலிருந்து ரூபா 20 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3.73 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது இச்செயற்திட்டத்திற்காக நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை. இளைஞர் மூலிகை விவசாயிகள் செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3 மில்லியன் நிதிஏற்பாடு மற்றும் நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 2 மில்லியன் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 2.50 மில்லியன் இச்செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

வேண்டும்.

(i) இச்செயற்திட்டத்திற்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டமும் செயல்முன்னேற்ற அறிக்கையும் 2019 மே 24 ஆந் திகதி வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளை 2000 விவசாயிகளுக்கு வழங்குவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்கி தெரிவு செய்யப்பட்ட 5 மாவட்டங்களின் மருந்துப் பயிர்களைப் பயிரிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என இச்செயற்திட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட 5 மாவட்டங்களில் 3 மாவட்டங்களின் 96 விவசாயிகள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த விவசாயிகளின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 92 வரை குறைவடைந்திருந்தது.

(iii) பொல்பிதிகம பிரதேச செயலகத்தின் கீழ் ராவாஎல கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் போகெல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் அமுல்படுத்தப்பட்ட

| | | |
|---|---|---|
| மருந்துப் பயிர் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 1.42 மில்லியன் நிதிஏற்பாடுகள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| • ரவாஎல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஆயுர்வேதத்தை பேணிக் காப்பதற்கான காணியில் நாற்றுக்களை பயிரிடுவதற்காக ரூபா 75,000 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரையும் நாற்றுக்களைப் பயிரிடுவதற்காக நிலம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே திணைக்களத்தினால் 350 மருந்து நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் நாற்றுக்களைப் பாதுகாப்பதற்கு முறையான நடைமுறை பின்பற்றாததன் காரணமாக அவற்றில் 250 நாற்றுக்களுக்கு அதிக அளவானவை அழிவடைந்து வெற்றிடத்தில் மண்நிரப்புதல் மாத்திரம் எஞ்சியிருந்தது. | முறையான விசாரணைகளை நடாத்தி பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். செயற்திட்டத்தின் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு முயற்சிகள் எடுத்தல் வேண்டும். | அவதானிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| • காணிகளை துப்பரவு செய்வதற்கும் வேலியை நிர்மாணிப்பதற்குமாக ராவாஎல கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 397,485 ஆகும். ஆனால் 2 ½ ஏக்கர் அளவான காணிப்பகுதிக்கு மாத்திரம் கம்பி வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | - மேற்கூறியவாறு - | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |
| • போகெல்ல பிரிவிலுள்ள விவசாயக் கிணற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 867,035 நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரை அக்கிணறு நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே காணியில் மண்ணை தயார்ப்படுத்துவதற்கும் நாற்றுக்களை நடுவதற்காகவும் ரூபா 90,000 தொகை 4 பிரிவுகளில் போகொல்ல விவசாய அமைப்பிற்கு 2017 திசெம்பர் 29 ஆந் திகதி | - மேற்கூறியவாறு - | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தும் 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| • | போகொல்ல பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட காணியில் நடுகை செய்வதற்காக கராம்பு செவன்தரா, கொன்கெகிரி ஆகிய 300 இற்கு அண்மித்த அளவான நாற்றுக்கள் வழங்கப்பட்டிருந்தும் அந்த அனைத்து நாற்றுக்களும் அதிக வறட்சியிலிருந்து பாதுகாப்பதற்கு முறையான நடைமுறைகள் பின்பற்றப்படாமையின் காரணமாக அழிவடைந்திருந்தது. | - மேற்கூறியவாறு - | வறட்சியின் காரணமாக நாற்றுக்கள் அழிவடைந்துள்ளன. |
| (க) | 2012 யூலை 13 ஆந் திகதி திணைக்களத்திலிருந்து வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற வைத்தியருக்கு அப்போதிலிருந்து 15 மாதங்களுக்கு ரூபா 548,376 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 200,000 தொகை மீள அறவீடு செய்யப்பட்டிருந்தும் எஞ்சிய ரூபா 348,376 தொகையும் அரசாங்க கட்டணம் ரூபா 137,094 தொகையையும் உள்ளடக்கிய ரூபா 485,470 மொத்த தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மிகையாகச் செலுத்தியதற்கான பொறுப்பிற்கு உட்பட்ட தரப்பினர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் அப்பணத்தை மீண்டும் அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது சம்பந்தமாக வடமேல் மாகாண சபையினால் நடாத்தப்படுகின்ற தொடக்க புலனாய்வு முடிவுறுத்தப் படவில்லை எனவும் வென்னப்புவ பிரதேச சபையினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கின்றேன். |
| (கா) | 2017 ஆம் ஆண்டின் போது ரூபா4.67 மில்லியன் செலவு செய்து மெத்தையுடனான 52 கட்டில்களை நாவின்ன ஆயுர்வேத ஆய்வுடத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அக்கட்டில்கள் மற்றும் மெத்தைகள் தரம் குறைந்தவையாகவும் கட்டில்களை தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட தகடுகள் கூர்மையாக இருந்ததன் அடிப்படையில் கட்டில்கள் ஒரு பக்கத்தில் குறுகியுள்ளதனால் நோயாளிகளுக்கு காயத்தை ஏற்படுத்தக் கூடியதாகக் காணப்படுகின்றது எனவும் 2 நாட்களிலிருந்து 3 நாட்கள் வரையான காலத்தின் போது மெத்தைகள் கிழிந்துள்ளதாகவும் கட்டில்களின் வளைவுகளுடன் நோயாளிகள் வழுக்கி விழுவதாகவும் ஆயுர்வேத ஆய்வுகூடத்தின் விசேட வைத்திய நிபுணரால் ஆயுர்வேத ஆணையாளருக்கு | உயர்ந்த தரத்திலான பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளதான கட்டில்களையும் மெத்தைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மெத்தைக்காக கொடுப்பனவுகள் செய்யப்படாததனால் அரசாங்கத்திற்கு பாதகம் ஏற்படுவதில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் மெத்தைகள் மீண்டும் திருத்தம் செய்யப்பட்டிருந்தும் மேலும் அவை பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்டது. | | |
| (கி) | பொரல்லை ஆயுர்வேத வைத்தியசாலையில் புதிய கட்டிடத்தை நிர்மாணிக்கும் திட்டங்களுக்கும் பொறியியலாளர் மதிப்பீட்டிற்கும் பிரதான நீர்த்தாங்கி (water sump) மற்றும் கழிவுநீர் கால்வாய் முறைமை உள்ளடக்கப்பட்டிருக்காததனால் அந்த இரண்டு விடயங்களுமின்றி ரூபா 1,164.12 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் வேலை முடிவுறுத்தப்பட்டு 2018 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன. | தேவைப்பாட்டை முறையாக இனங்கண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாது ஒப்பந்தத்தை வழங்கியதன் பின்னர் தேவைப்பாட்டை இனங்காண்பதன் மூலம் அரசாங்கத்திற்கு செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்த அதிக செலவுகளுக்கான பொறுப்புக்கள் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும். | இது தொடர்பாக பின்னர் பதில் வழங்கப்படும். |
| (i) | 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் கட்டில்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டன. | | |
| (ii) | ரூபா 7.37 மொத்த கிரயமான 200 தொலைக்காட்சி பெட்டிகள், நீரை சூடாக்கும் 108 கீசர்கள் (Water geezes) மற்றும் காற்று சீராக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் உத்தரவாத காலம் காலாவதியாகும் வரை கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது. | | |
| (iii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் ஒப்பந்தக்காரரினால் வேலைகளை நிறைவேற்றி பெற்றுக்கொள்வதற்கும், தாமதமின்றி ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்கும் போதியளவு நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருக்காததனால் ஒப்பந்தக்காரர் சமர்ப்பித்திருந்த விலைப்பட்டியல்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் போது கொடுப்பனவு செய்வதற்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்தது. விலைப்பட்டியல்களுக்காக கொடுப்பனவுகள் செய்தல் தாமதித்ததன் அடிப்படையில் ஒப்பந்தக்காரரால் ரூபா 27.91 மில்லியன் தாமதக் கட்டணத்திற்காக வேண்டுதல் விடுக்கப்பட்டிருந்தது. | | |
| (கி) | 2011 மே மாதத்தின் போது ரூபா 381,200 செலவு செய்து கொள்வனவு செய்த 07 கைவிரல் அடையாளமிடும் இயந்திரங்களில் 06 இயந்திரங்களின் அறிக்கையானது வருகைகள் மற்றும் வெளிச்செல்லலை உறுதிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. கைவிரல் அடையாளமிடும் இயந்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படாத காலத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேர வேலைப்படிகள் விடுமுறைதினச் சம்பளங்களாக 2018 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 43.87 மில்லியன் செலுத்தப்பட்டது. | 2009 ஏப்ரல்16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கொள்வனவு செய்யப்பட்ட கைவிரல் அடையாளமிடும் இயந்திரங்கள் அனைத்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கைவிரல் அடையாளமிடும் இயந்திரங்கள் இன்னும் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதனால் கொள்வனவு செய்து பொருத்தியதன் பின்னர் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (கீ) | ஆயுர்வேத மருந்து உற்பத்திக்காக மருந்து வகைகளைப் பெற்றுக்கொள்ளல், பகிர்ந்தளித்தல் அவற்றை முறையாக கணக்கு வைப்பதற்கான பதிவேடுகளையும் ஆவணங்களையும் நாளதுவரையாகப் பேணுதல் முதலிய அடிப்படைச் செயற்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ள அங்கீகரித்த மருந்துக் கலவையாளர் பதவிகளின் எண்ணிக்கை 60 ஆக இருந்த போதிலும், உள்ளபடியான மருந்துக் கலவையாளர் பதவிகளின் எண்ணிக்கை 17 ஆக இருந்ததனால் 2019 மே 31 ஆந் திகதி வரை காணப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை 43 ஆக இருந்தது. 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது கற்கைநெறிக் கட்டணமாக ரூபா 1.67 மில்லியன் செலவு செய்து மருந்துக் கலவையாளர் பதவிகளுக்காக 21 நபர்கள் பயிற்றுவிக்கப்பட்டிந்த போதிலும் அந்த 21 நபர்களில் பதவிகளுக்குத் தேவையான தகைமைகளை அடைந்திருக்காத 12 நபர்களையும் சேர்த்துக் | அரசாங்கத்தின் நிதிகளை செலவு செய்து பயிற்சிகள் பெற்று தகைமையுள்ள நபர்களிலிருந்து எதிர்பார்த்த செயலாற்றலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இது சம்பந்தமாக கவனம் செலுத்தி உரிய முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு அமைச்சு செயலாளருக்கு சிபார்சுகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. எனினும், தேவையான தகைமைகளை அடைந்திருந்த 06 நபர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (கு) | சுதேச மருத்துவம் தொடர்பான தேசிய நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 523,180 செலவு செய்து துண்டுப் பிரசுரங்களும் பதாதைகளும் அச்சிடப்பட்டிருந்தன. எனினும், துண்டுப் பிரசுரங்களையும் பதாதைகளையும் பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குதல் சம்பந்தமாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை இனங்கண்டு நடைமுறைப்படுத்தப்படாததனால் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பதாதைகள் எந்த அளவிற்கு அச்சிட்டு வழங்கப்பட்டன என்பதனையும் ஆண்டின் இறுதியில் துண்டுப் பிரசுரங்களினதும் பதாதைகளினதும் எஞ்சியுள்ள இருப்புக்களின் அளவும் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | துண்டுப் பிரசுரங்களையும் பதாதைகளையும் வடிவமைத்தல், அச்சிடல், களஞ்சியப்படுத்தல் வழங்குதல் தொடர்பான முறையான உள்ளகக்கட்டுப்பாட்டு நடைமுறையை இனங்கண்டு அமுல்படுத்தல் வேண்டும். | துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பதாதைகளை வழங்குவதற்கு முறையான நடைமுறை தற்பொழுது ஆரம்பிக்கப் பட்டுள்ளது. |
| (கூ) | முறையான அங்கீகாரமின்றி இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தால் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 641,128 செலவு செய்து பொரல்லை போதனா வைத்தியசாலை வளவில் விற்பனை நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதன் நீர் மற்றும் மின்சார செலவுகள் திணைக்களத்திற்கு செலவுப் பொறுப்பாக இருந்தது. நியாயமான வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விற்பனை நிலையத்திற்கான வாடகையை அறவிட்டு அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தல் வேண்டும். | இது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |
| (கெ) | பொரல்லை ஆயுர்வேத போதனா வைத்தியசாலை வளவில் நடாத்தப்பட்டு வருகின்ற தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் (NLDB) பால் விற்பனை நிலையத்திற்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | பொருளாதார வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (கே) | பொரல்லை ஆயுர்வேத போதனா | மூன்று வழி மின்சார | இது சம்பந்தமாக |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தியசாலையில் பொருத்தப்பட்டுள்ள இரண்டு வாயு சீராக்கி இயந்திரங்களில் ஒரு இயந்திரம் முழுமையாக செயற்பாடற்று இருந்ததுடன் மற்றைய இயந்திரம் அடிக்கடி செயற்பாடற்றிருந்தமை ஆய்வு கூடத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரு மாதத்திற்கு 100 Full blood count பரிசோதனைகள் மேற்கொள்ளக் கூடிய Hematology Analyzer இயந்திரம் செயற்படாமைக்கு நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் குறிக்கோளில் 2018 மார்ச் 12 ஆந் திதகி ரூபா 400,000 செலவு செய்து 02 வாயுசீராக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், இந்த வாயு சீராக்கி இயந்திரங்களுக்கு மூன்று வழி மின்சார வழங்கல்களைப் பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக 2019 மே 02 ஆந் திகதி வரை 02 வாயு சீராக்கி இயந்திரங்களை செயற்படுத்த முடியாமையின் காரணமாக Full blood count பரிசோதனையை மேற்கொள்ளுதல் சிக்கனமானதாகக் காணப்பட்டது. | வழங்கலைப் பெற்றுக்கொண்டு இயந்திரத்தைப் பயன்படுத்துதல் வேண்டும். | தாமதம் ஏற்பட்டுள்ளதுடன் மிகவும் விரைவாக அதனை சரிசெய்வதற்கு அபிவிருத்திப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (கை) | பொறல்லை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் கட்டணம் அறவிடப்படுகின்ற 20 அறைகளினை உள்ளடக்கிய பஞ்சகர்ம கட்டிடத்தின் கூரை உடைந்து காணப்படுகின்றமை, உட்கூரையினால் நீர் ஒழுகுதல், தரை ஓடுகள் களன்று காணப்படுதல் முதலிய காரணத்தின் அடிப்படையில் 02 அறைகள் 03 ஆண்டுகள் காலமாக மூடப்பட்டிருந்ததனால் இழக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 2.16 மில்லியனாக இருந்த போதிலும், மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக திருத்தங்களைச் செய்து இரண்டு அறைகளையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தற்பொழுது இது செயற்படும் நிலையில் காணப்படுகின்றது. |
| (கொ) | பொரலை ஆயுர்வேத வைத்தியசாலையில் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற | திணைக்களத்திற்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களதும் | எலி தொந்தரவை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக வளவின் 02 ஆம் இலக்க மற்றும் 05 ஆம் இலக்க இரண்டு பஞ்சகர்ம வாட்டுக்கள் மற்றும் இரண்டு பணம் செலுத்தும் வாட்டுக்களை உள்ளடக்கும் வகையில் பொருத்தப்பட்ட மின்பிறப்பாக்கி இயந்திரங்களைப் பொருத்தியதன் பின்னர் இயந்திரம் 10 மணித்தியாலங்கள் மாத்திரம் செயற்பட்டிருந்தது எனவும், அது 2010 ஆம் ஆண்டின் பின்னர் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் வெளிப்படுத்தப்பட்டது. இந்த இயந்திரங்களைப் பாதுகாப்பதற்காக போதியளவு ஒழுங்குவிதிகள் வழங்கப்படாததன் காரணமாக இயந்திரத்தின் உள்ளக முறைமை (Panel board) எலிகளால் கடிக்கப்பட்டிருந்ததுடன் 2019 மே 02 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளது எனவும் அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்குள் திருத்தங்களை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கின்றேன். |
| (கோ) | கண் நோய், எலும்பு முறிவு, எரிகாயம், பாம்பு விசம், உள்நோய், புற்றுநோய் முதலியவாறான நோய்கள் சம்பந்தமாக 20 பாரம் பரிய விசேட வைத்தியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டு 06 ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 5.96 மில்லியன் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தது. விசேட வைத்தியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான அதிகாரம், 20 விசேட வைத்திய நிபுணர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக கிடைத்த அங்கீகாரம், அந்த 20 பேர்களைத் தெரிவுசெய்த அடிப்படையைப் போல அவர்களின் தனிப்பட்ட கோவைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பாரம்பரிய விடேச ஆயுர்வேத வைத்தியர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக கிடைத்த அங்கீகாரம், தெரிவு செய்த அடிப்படையைப் போல அவர்களின் தனிப்பட்ட கோவைகளை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | தற்பொழுது இந்த பாரம்பரிய வைத்தியர் களிடமிருந்து உச்ச அளவு சேவை பெற்றுக் கொள்ளப்படுகின்றது எனவும் வைத்தியர்களின் கோவைகளை தேடிப்பார்க்க முடியாது எனவும் தெரிவிக்கின்றேன். |
| | சுதேச மருத்துவ வித்தியாலயங்களில் மாணவர்களுக்கு கற்பிப்பதற்காக அனுப்பி ஆயுர்வேத வைத்திய சேவைக்கு சிறப்பான பங்களிப்பை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக முறையான நடைமுறை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக முறையான நடைமுறையை இனங்கண்டு அமுல்படுத்துதல் வேண்டும். | கற்பித்தல் நடவடிக்கைகளையும் தேவையான அறிவையும் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் எனவும் முறையான நடைமுறை தோற்றுவிக்கப்படும் எனவும் |

| | | | |
|---|---|---|---|
| | | | தெரிவிக்கின்றேன். |
| (கௌ) | 1962 ஆம் ஆண்டின் போது நாவின்ன ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையைத் தோற்றுவித்ததன் பின்னர் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மேலும் 04 ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்த வைத்திய சாலைகளில் நோய்கள் தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது என்பதற்கு அல்லது மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக மற்றும் அது தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தலுக்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் அது தொடர்பான உறுதியான ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி நடைமுறைகளும் அது தொடர்பான உறுதியான ஆலோசனைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆராய்ச்சி தொடர்பான தகவல் முறைமையைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும். | தகவல்கள் எதிர்காலத்தில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படும். |
| (ச) | பொரல்லை ஆயுர்வேத போதனா வைத்தியசாலையில் நோயாளிகளின் தரவுப் பதிவேட்டினை அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய மருத்துவ உத்தியோகத்தர்களால் அத்தரவுப் பதிவேடானது அதற்கிணங்க சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2018 ஆம் ஆண்டிற்கான தரவுப் பதிவேடு 2019 சனவரி மாதம் வரை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. நோயாளிகளின் தரவுப் பதிவேட்டினை பெற்றுக் கொள்வதற்கு உறுதியான படிவம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததுடன் ஆண் பெண் தன்மை, வயது,நோய், முதலாம் மற்றும் இரண்டாம் தடவை வருகை தருதல் முதலிய தகவல்களுடனும் தகவல்கள் இன்றியும் பல்வேறு படிவங்களின் கீழ் மருத்துவர்களால் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக | தரவுகளைப் பரிசீலிப்பதற்கும் முகாமைத்துவத்திற்கு நம்பகமாக தரவுகளைப் பயன்படுத்தக்கூடிய வகையில் தரவுகளையும் தகவல்களையும் சேகரிப்பதற்குமாக முறையான நடைமுறை தோற்றுவிக்கப்படுதல் வேண்டும். | தற்பொழுது வைத்தியசாலை யிலுள்ள தரவுப் பதிவேடு முறையாகப் பேணப்படுதல் இடம்பெறுவதற்காக மருத்துவ உத்தியோகத்தர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். |

அத்தகவல்களை ஒருங்கிணைக்க முடியாதிருந்தது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் வகையில் நிறுவனத்தினால் அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகளும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்காக காணப்படுகின்ற காலமும் செயல்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்காக பொருத்தமான குறிகாட்டிகளும் இனங்காணப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் அவ்வாறான குறிகாட்டிகளை இனங்கண்டு குறிக்கோள்களிலிருந்து அடைந்து கொள்ளப்பட்ட அளவையும் அடைந்து கொள்ளப்படாதவைகளைப் போல கவனம் செலுத்தப்பட வேண்டிய பல்வேறு துறைகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்குரிய இலக்குகள், குறிகாட்டிகளை இனங்காணல், செயல் முன்னேற்றத்தை அளவீடு செய்தல் என்பவற்றிற்கு நடவடிக்கை எடுத்து அவற்றிலிருந்து மீறல்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்ககின்றேன் எனவும் இது சம்பந்தமாக அபிவிருத்திப் பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டு தேவையான குறிகாட்டிகளைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கின்றேன். |

## 5. நல்லாட்சி

### 5.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தின் இணையதளம் நாளதுவரையாக்கப் பட்டிருக்காததுடன் நிறுவனங்கள் மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளால் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் மற்றும் சேவைகள் தொடர்பான தகவல்கள் இணையதளத்தில் | பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய தகவல்களை சமர்ப்பிக்கும் வகையில் இணையத்தளத்தை நாளதுவரையாக்கி பேணுதல் வேண்டும். | இணையத்தளத்தை நாளதுவரையாக்குதல் இடம்பெற்று வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை மேலும், பொதுமக்களின் முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கு இணையதளத்தில் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | தகவல்களை தெரிந்து கொள்ளும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் வேண்டுதல்கள், பதிலளித்தல்கள், பரிகாரத்தில் ஈடுபடுதல்கள் ஆவணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | தகவல்களை தெரிந்து கொள்ளும் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தகவல்களை வேண்டுதல், பதிலளித்தல்கள், பரிகாரத்தில் ஈடுபடுதல்கள் என்பன ஆவணப்படுத்தல்கள் வேண்டும். | திணைக்களத்தின் அனைத்து உப அலுவலகங்களுக்காக தகவல்களைத் தெரிவித்துக் கொள்ளும் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் தொழிலாளர் வளக் குறைவின் காரணமாக அந்த உத்தியோகத்தர்களும் நிறுவன நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனவே கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் நூற்றுக்கு நூறு வீதம் முழுமையாக அனைத்து செயற்பாடுகளையும் நிறைவேற்ற முடியாதுள்ளன. |

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆயுர்வேத வைத்தியசாலைகள், 10 உப நிறுவனங்கள் மற்றும் 06 மூலிகைப் பூங்காக்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த திணைக்களத்தினதும் ஆயுர்வேத மருத்துவ சபையினதும் உள்ளகக் கணக்காய்விற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளருடன் மேலும் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அந்த இரண்டு உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் சனவரி | நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இன் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு பிரிவின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படாமை தொடர்பாக இணங்கி கொள்கின்றேன். எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக பிரதான உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் பதவியை உருவாக்கி பதவியணியைத் தோற்றுவித்து சுதந்திரமாக செயற்படுத்துவதற்கு கணக்காய்வுப் பிரிவு |

| | | | |
|---|---|---|---|
| | மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் பொருள் மீளாய்வுக் கடமைகள் மற்றும் மருந்துகளை வழங்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தாததன் காரணமாக நிதிப் பிரமாணம் 134(1) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவில்லை. | | உருவாக்கப்படும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்விற்கு திட்டங்களிற்கு இணங்க மீளாய்வாண்டின் போது 18 துறைகளின் கீழ் 31 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு இணங்க செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்காததனால் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் செயலாற்றல் மட்டத்தை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஊழியர் வெற்றிடம் காணப்படுவதன் காரணமாக முடியாதுள்ளது எனவும் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் உள்ளகக் கணக்காய்வின் செயலாற்றல் மட்டத்தை உச்ச அளவிற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41(1)(அ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் ஒப்படைக்கப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வு முகாமைத்துவக் குழு கூட்டத்தின் போது மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41(1)(ஆ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களம் பூர்த்தி செய்த செயற்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்டவாறு உரிய செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டதா என்பது தொடர்பான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தின் போது மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் 531 வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிஏற்பாடு பயன்படுத்தப்படாது எஞ்சியிருந்தும் பின்வரும் சந்தர்ப்பங்களைத் தவிர்த்து அந்த சேமிப்புக்கள் தொடர்பாக பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமை தாக்கமளித்திருக்கவில்லை அதற்கிணங்க அங்கீகரித்த பதவியணியினர் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்பி செயலாற்றலை மேம்படுத்துவதற்கு அல்லது வெற்றிடங்கள் காணப்படுதல் செயலாற்றல் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை யாயின் அங்கீகரித்த பதவியணியினரை திருத்தம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்துக்கள் தெரிவிக்கப்படவில்லை. |
| (அ) ஆயுர்வேத திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் போது விடயத்திற்குரிய, தாபன மற்றும் | | |

நிருவாக செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 107 முகாமைத்து உதவி உத்தியோகத்தர் பதவிகள் அங்கீகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த 37 பதவிகள் வெற்றிடமாக இருந்தன.

(ஆ) திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுக்கு மத்தியில் கருத்தரங்குகள் கல்வி வகுப்புக்கள் மற்றும் ஆயுர்வேதம் தொடர்பான கற்கை நெறிகளை நடாத்தும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக தோற்றுவிக்கப்பட்ட சுதேச மருத்துவ முறைமை தொடர்பான தேசிய நிறுவனத்தில் (NITM) 16 சிரேஷ்ட மட்ட பதவிகளுக்கு மத்தியில் பிரதிப் பணிப்பாளர் (பொது) ஆகிய பிரதான பதவி மற்றும் 06 அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில் 04 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(இ) திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுக்கு மத்தியில் சுதேச மருத்துவ முறைமையை மேம்படுத்தவதற்குரிய ஆராய்ச்சி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நேரடியாக பங்களிப்புக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய சிரேஷ்ட மட்டத்திலுள்ள அங்கீகரித்த 77 பதவிகளில் 24 பதவிகளும் மூன்றாம் மட்டத்தில் அங்கீகரித்த 23 பதவிகளில் 22 பதவிகளும் இரண்டாம் மட்டத்தில் அங்கீகரித்த 84 பதவிகளில் 45 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஈ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் கீழுள்ள 09 வைத்தயசாலைகளில் ஒரு வைத்தியசாலையை

பேணுவதற்கு தேவையான 09 பதவிகளின் கீழ் அங்கீகரித்த 1021 பதவிகளில் 275 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சில வைத்தியசாலைகளுக்குத் தேவையான பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.